ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திணைக்கோட்பாட்டின் நோக்கில் துறைமுகம் புதினம்

செல்வி. அ
முழுநேரமுனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் 637401.

முனைவர் இரா.கலைச்செல்வி
நெறியாளர் & இணைப்பேராசிரியர் &
துறைத்தலைவர் தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் 637401.

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையில் எதார்த்தங்களை இயற்கையோடு இயைந்து வழிமொழிந்து கூறுவதாகும். பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வளரத் தொடங்கி இந்நூற்றாண்டில் மிகப் பரவலான ஓர் இலக்கிய வகையாக வளர்ந்திருப்பது புதினம் ஆகும். பண்டைய தமிழ் சமுதாயத்தில் முதற்பொருள், கருப்பொருள் இவைகளின் மூலம் தங்கள் வாழ்வாதாரங்களை பிரித்துக்கொண்டனர். புதினம் என்பது கதை சொல்வதாக மட்டும் இருக்க முடியாது வாழ்க்கையைச் சொல்ல வேண்டும். எந்த ஒரு படைப்பும் அது தோன்றிய சமூகம், இயற்கை வரலாறு முதலிய பின்புலத்தில் இவற்றினூடாகப் பயணிக்கும் மனித வாழ்வியலை மொழிதல் என்பது இயல்பானது. திணைக்கோட்பாடு சங்க இலக்கியத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடிய ஒன்று அன்று சமகாலத்தில் தோன்றிய புதினத்திலும் திணைக்கோட்பாடு பொருந்தும். அவ்வகையில் துறைமுகம் புதினத்தின் புறநிலையாக முதற்பொருள், கருப்பொருள் அமைந்துள்ளன.

ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வில் புதினங்களில் இடம்பெற்றுள்ள திணைகளை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறை அணுகுமுறையும் அவற்றைப் பகுத்துக் கூறுவதால் பகுப்புமுறை அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

முன்னுரை

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தக்குடி" என்னும் இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழைமை உணரலாம். பழந்தமிழ் மக்கள் வாழ்வியலை எடுத்துக்கூறுவது இலக்கியங்கள். சிறுகதையிலிருந்து வேறுபட்டு பல நிகழ்ச்சிகளையும் செயல்களையும் தன்னகத்தே கொண்டு கதை மாந்தரின் பண்புகளுக்கு ஏற்ப ஒரு கதையை வளர்த்துச் சென்று ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் உரைநடை இலக்கிய வகையே புதினமாகும். புதினத்திற்குரிய கதைப்பொருள் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. புதினத்தின் ஆசிரியர் தம் உள்ளம் விரும்பிய எதை வேண்டுமாயினும் கதைக்குரிய பொருளாக எடுத்துக்கொள்ளலாம். அவ்வகையில் தோப்பில் முஹம்மது மீரான் அவர்கள் எழுதிய துறைமுகம் என்னும் புதினம் கடற்கரையில் வாழும் மீனவர் மக்களின் வாழ்வை உள்ளடக்கியது ஆகும். கடலும் கடல் சார்ந்த நிலம் கடற்கரை என்றும் நெய்தல் திணையாகும். துறைமுகம் புதினத்தில் நெய்தல்திணையின் முதற்பொருள், கருப்பொருள் எவ்வாறு பொருந்தியுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

*முதற்பொருள்*

*"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்*
*இயல்பு எனமொழிப இயல்பு உணர்ந்தோரே"[1] (தொ.ப.348)*

*என்ற தொல்காப்பியம் நூற்பா மூலம் முதற்பொருளான நிலத்தினையும், பொழுதினையும் திணைக்குரிய அடிப்படைக் காரணிகளாக முன்வைக்கின்றனர் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.*

*நிலம்*

*"மாயோன் மேய காடு உறை உலகமும்*
*சேயோன் மேய மை வரை உலகமும்*
*வேந்தன் மேய தீம் புனல் உலகமும்*
*வருணன் மேய பெரு மணல் உலகமும்*
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்*
*சொல்லிய முறையான சொல்லவும் படுமே"[2] (தொ.ப.348)*

*என்று தொல்காப்பிய நூற்பா மூலம் ஒவ்வொரு திணைக்கும் நிலத்தைச் சுட்டியுள்ளனர் சான்றோர்கள் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். நெய்தல் நிலம் பெருமணல் கரையுடை கடல் சூழ்ந்த இடம் ஆகும். அவ்வகையில் துறைமுகம் புதினம் கடற்கரையில் வாழும் மக்களைப் பற்றியது ஆகும்.*

*"சித்திரை மாதம் பிறக்க இன்னும் சில நாட்கள்தான் இருக்கின்றன. கடற்காற்றின் குளுமை. அத்துடன் மீன் வாசனை வேறு! காற்றின் மேனியில் புரண்டு வரும் இந்த வாடை 'மீன்பாடின்' அறிகுறிகளில் ஒன்று. கடந்த ஆண்டு கடல் ஏமாற்றிவிட்டது" 3 (து.ப.7)*

*என்று துறைமுகம் புதினத்தின் கதை ஆரம்பமாகிறது. இவ்வரிகள் மூலம் நெய்தல்திணை கடலும் கடல் சார்ந்த இடம். நெய்தல் நிலம் என அறிய முடிகிறது.*

*பொழுது*

*முதற்பொருளின் கூறாகிய காலம் 1.பெரும்பொழுது 2.சிறுபொழுது என்னும் இரண்டு பகுதிகளை உடையது.*

*"பெரும்பொழுது என்றா சிறுபொழுது என்றா*
*இரண்டு கூற்றது இயம்பிய பொழுதே"[4] (அ.பெ.வி.ப.15)*

*என்ற அகப்பொருள் விளக்கம் நூற்பா மூலம் பொழுது இரண்டு. பெரும்பொழுது ஆண்டின் கூறாகக் கணக்கிடப்படுவது. நூல்களின் கூறாகக் கணக்கிடப் பெறுவது சிறுபொழுது ஆகும்.*

*"எற்பாடு*
*நெய்தல் ஆதல் மெய்பெறத்தோன்றும்"[5] (தொ.ப.350)*

*என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் எற்பாடு – எற்படு என்பதற்குப் பின்மாலைப் பொழுது என்பது பொருள். இந்தப் பின்மாலைப் பொழுதே நெய்தல் திணைக்கும் பொருந்தத் தோன்றும் பருவமாகும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.*

*"மருதம் நெய்தல்என்று இவைஇரண் டற்கும்*
*உரிய பெரும்பொழுது இருமூன் றும்மே"[6] (அ.பெ.வி.ப.17)*

*என்ற அகப்பொருள் விளக்கம் நூற்பா மூலம் மருதம், நெய்தல் ஆகிய இரண்டு திணைகளுக்கும் ஆறு பெரும்பொழுதுகளும் உரியன. என்று கூறுகிறது.*

*"கடற்கரையை ஒட்டிய தென்னந்தோப்புகள் விரித்த நிழலில் சித்திரை மாதம் கடலில் இறக்கக்கூடிய மழவலைகளை மீனவர்கள் பழுதுபார்த்துக் கொண்டிருந்தனர். வெயிலின் திமிர் அடங்கியதும் வலைகளைத் தூக்கித் தோளில் எடுத்தனர். வலையில் அற்றுப்போன கண்ணிகள் தெளிவாகத் தெரிவதற்காகச் சூடடங்கிய மணலில் போட்டுப் பழுதுபார்த்தனர்."[7] (து.ப.8)*

*என்ற துறைமுகம் புதினத்தின் வரிகள் மூலம் நெய்தல் திணைக்கான பின்மாலைப்பொழுது சிறுபொழுதும், பெரும்பொழுதான சித்திரை மாதத்தையும் தெளிவாகக் காணமுடிகிறது.*

*கருப்பொருள்கள்*

*"தெய்வம் உணவே மா மரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ் வகை பிறவும் கரு' என மொழிப."[8] (தொ.ப.353)*

என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண்ணிசை என்றுள்ளவையும் இவையொத்த பிறவும் கருப்பொருள் என்று கூறுவர் பெரியோர் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

தெய்வம்

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதனடிப்படையில் இயற்கையை வழிபடும் வழக்கம் தோற்றம் பெற்றன. நெய்தல் திணையின் தெய்வம் வருணன்.

"என்னப்பா தொம்மா? எப்படித் தெரீது?'

'தங்க நாயனே! கடலு சேலாத்தான் இரிக்கி மேலே இருக்கிய ராசா ஏரணம் அளக்கனும்.'

சித்திரை பெறக்குக்கு முன்னே நெத்திலிப்பாடு இரிக்குமாப்பா?

'சொல்ல முடியாது நாயனே. மக்கக் குட்டியளெ கடலு காப்பாத்தனும். நம்மட்ட என்ன இரிக்கி? அந்தப் புண்ணியவாளன் கண்ணு தொறக்கனும்"[9] (து.ப.10)

என்ற துறைமுகத்தின் வரிகள் மூலம் கடற்கரை மீனவர்கள் கடலை தெய்வமாக மதிப்பதைக் காண முடிகிறது.

உணவு

மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத்தேவைகள் மூன்று. அவை உணவு, உடை, உறைவிடம் என்பன. உயிர் வாழ இன்றியமையாத பொருள் உணவு ஆகும். அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ உணவையே சார்ந்து இருக்கின்றன.

"சித்திரை மாதம் பிறக்கும் முன் இருநூறு கீற்று ஓலை கீறி முடைய வேண்டும். கடற்கரையில் நான்கு கால் நாட்டிச்சிறு புரை கட்டி அதில் தான் வியாபாரம் செய்ய வேண்டும். சித்திரையில் மீனபாடு இருக்குமானால் வியாபாரம் ஜோராக இருக்கும். வேக வைத்த சிறுபயிறு, மரச்சீனிக்கிழங்கு, கிழக்குப் புட்டு, சுக்குகாப்பி, ஆப்பம், மோர், சுருட்டு, பீடு, வெற்றிலை பாக்கு இப்படி ஏராளம்"[10] (து.ப.21)

என்ற துறைமுகம் புதினத்தின் வரிகள் மூலம் கடற்கரை மக்கள் இயற்கையான உணவை உண்பது மட்டும் அல்லாமல் வியாபாரமும் செய்வதையும் காண முடிகிறது.

மா

மா என்றால் விலங்கு ஒரு நிலத்தில் வாழும் விலங்கு மற்றொரு நிலத்திற்குச் சென்று வாழும் தன்மையுடையது.

"பதினொன்றாம் இரவுப் பிறையின் அழகிய மேனியிலிருந்து நழுவி இறங்கிய நைலான் நிலவு கொல்லக்குடி இடைவெளியிலும் தட்டாக்குடி இடை வெளியிலும் பரந்து கிடந்தது. பள்ளியிலிருந்து ஆட்கள் கிளம்பி போய்விட்டனர். பள்ளிவாசல் கதவுகளை அடைக்கும்போது இரவு மணி 12.45 தெருக்குள் சூனியமாயின. ஆட்களின் அசைவுகள் இல்லை. தெருவில் நிலாவொளி மட்டும் சேண்டப்பள்ளிப் பாறையின் கறுத்த நெற்றியிலிருந்து நாய்களின் குரைப்பு கேட்டது. உறங்கும் கிராமத்தின் குறட்டை ஓசைபோல் ஏதோ ஒரு தெரு நாயின் எதிர்க்குரைப்பும்" (து.ப.140)

என்ற துறைமுகம் புதினத்தின் மூலம் நாய் என்ற விலங்கு உள்ளதை அறிய முடிகிறது.

மரம்

"கழையின் ஒரு முனையில் தும்போலையை எடுத்துக் கயிற்றால் கட்டிக் கைக்கெட்டாத ஓலைகளைக் கீழே நின்றுகொண்டு தென்னை ஓலையில் தும்பில் செருகிப்பிடித்துக்கொண்டு கழையை மெதுவாகச் சுழற்றுவார். இரு தும்போலைகளும் ஒன்றோடொன்று பிணைந்து விடும். பிறகு கொஞ்சம் விலகி நின்று கழையை வெட்டி இழுக்கும் போது தென்னையிலுள்ள ஓலை அடர்ந்து விழும்.”’(து.ப.20)

என்ற துறைமுகம் புதினம் மூலம் ஓலையை சேர்த்து இழுப்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் தென்னைமரம் இருப்பதைக் காண முடிகிறது.

*புள்*

*புள் என்றால் பறவை. பறவைகள் மூலம் பல்வேறு விதமான காய் செடிகளும் பழஞ்செடிகளும் உலகில் பரப்புகின்றன.*

*"இன்று அமைதியான கடல் பெரிய திரைகள் இல்லை பருந்துகள் வட்டமிட்டுப் பறக்கின்றன. மீன் கரையை நோக்கி நெருங்கும் அறிகுறி" (து.ப.7)*

*"சாமக் கோழியின் கூவல் எங்கிருந்தோ கேட்டது பாயில் உருண்டும் புரண்டும் படுத்திருந்த காசீமின் காதில் அது விழுந்தது." (து.ப.35)*

*என்ற துறைமுகம் புதினத்தின் வரிகள் மூலம் நெய்தல்திணையின் பறவையான பருந்து, சாமக்கோழி இருப்பதை அறிய முடிகிறது.*

*செய்தி*

*செய்தி என்பது தொழில் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். நெய்தல் திணையின் தொழில் மீன்பிடித்தல், உப்பு விற்றல் ஆகும். "கடந்துபோன சித்திரை மாதத்தில் பெயரளவுக்குக் கொஞ்சம் நெத்திலிப்பாடிருந்தது. குட்டை சுமப்போருக்கும் பெண்களுக்கும் சைக்கிளில் லோடு கொண்டு போவோருக்கும் மட்டுமே அது போதுமானதாக இருந்தது. கொழும்புக்குக் கட்டி அனுப்பும் அளவுக்கு மீன்பாடில்லை என்றாலும் ஆவலால் ஒன்றிரண்டு தடைவ கொழும்புக்குக் கட்டி அனுப்ப நேர்ந்தது. கொழும்பில் நல்ல விலை இருந்தது. கட்டுகள் தூத்துக்குடியில் லாரி இரங்கின." (து.ப.9) என்ற துறைமுகம் புதினத்தின் வரிகள் மூலம் கடற்கரை மக்கள் மீன் பிடிப்பது மட்டும் அல்லாமல் கொழும்பு, தூத்துக்குடி என்று வியாபாரம் செய்யும் முறையையும் காணமுடிகிறது.*

*முடிவுரை*

*பழந்தமிழ் மக்களின் வாழ்வியலை எடுத்துக்கூறுவது இலக்கியங்கள். காலத்திற்கு தகுந்தாற் போல் ஒவ்வொரு மக்களின் வாழ்வின் நிகழ்வுகளை எடுத்துக்காட்டுவது புதின இலக்கியமாகும். புதினத்தின் மூலம் பல்வேறு மக்களின் வாழ்வையையும் சித்தரிக்கின்றன. தோப்பில் முஹம்மது மீரான் எழுதிய துறைமுகம் என்னும் புதினம் கடற்கரையில் வாழும் நெய்தல் நில மக்களின் வாழ்வைச் சித்தரிக்கின்றார். நெய்தல் திணையின் முதற்பொருள் கருப்பொருள் துறைமுகம் புதினத்தில் பொருந்தியுள்ளதை இக்கட்டுரையின் மூலம் காண முடிகிறது.*

*அடிக்குறிப்புகள்*


1. *ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம், ப.348, பதிப்பு 2010, உமாபதிப்பகம் சென்னை 600001.*
2. *மேலது, ப.348.*
3. *தோப்பில் முஹம்மது மீரான், துறைமுகம், ப.7, பதிப்பு 2009, அடையாளம் பதிப்பகம், சென்னை.*
4. *ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.15, பதிப்பு 2010, கதிர்பதிப்பகம் திருவையாறு 613204.*
5. *ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம், ப.349, பதிப்பு 2010, உமாபதிப்பகம் சென்னை 600001.*
6. *ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.17. பதிப்பு. 2010, கதிர்பதிப்பகம் திருவையாறு 613204.*
7. *தோப்பில் முஹம்மது மீரான், துறைமுகம், ப.8, பதிப்பு 2009, அடையாளம் பதிப்பகம், சென்னை.*
8. *ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம், ப.353, பதிப்பு 2010, உமா பதிப்பகம் சென்னை 600001.*
9. *தோப்பில் முஹம்மது மீரான், துறைமுகம், ப.10, பதிப்பு 2009, அடையாளம் சென்னை.*
10. *மேலது ப.21.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********